

# IWAY (ஐவே) ஸ்டாண்டர்டு
# குடியிருப்புப் பிரிவு

*பொதுப் பிரிவுடன் சேர்த்து குடியிருப்பிற்கான பிரத்யேக கூடுதல் தேவைகள்*

பொதுப் பிரிவில் உள்ள எல்லா பிற தேவைகளும் (எ.கா. அவசரநிலை மேலாண்மை, கட்டடம் மற்றும் மின்சாரம் தொடர்பான பாதுகாப்பு), குடியிருப்பு மற்றும் குடியிருப்பு சார்ந்த பிற வசதிகளுக்கும் அதே அளவு பொருந்தும்.

இந்த ஆவணம், IWAY(ஐவே) இருப்பிட/தங்குமிட வசதி விதிகளின் செந்தரப்பகுதி, பதிப்பு 6.0.-ரின் மொழிபெயர்ப்பு. இந்த மொழிபெயர்ப்பு பொது அறிவிப்பிற்காக மட்டுமே, ஆகையால், இதை ஒப்பந்த படிவமாக கருதக்கூடாது. தகராறுகள் மற்றும் பொருள் புரிதலில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் காலங்களில், இதன் ஆங்கில மூலவடிவம் ஒன்றுதான் மேற்கோளாக எடுத்துக்கொள்ள உகந்த ஆவணமாகும்.

**EDITION 6.0 PUBLISHED SEPTEMBER 2019 - © Inter IKEA Systems B.V. 2019**

IKEA

# 3 குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றனர் மற்றும் வேலை செய்வதற்கும் கற்றலுக்கும் வாய்ப்புகளைப் பெறுகின்றனர் மற்றும் குடும்ப வாழ்க்கை முன்னிறுத்தப்படுகின்றது.

## குழந்தைகளின் பாதுகாப்பு

அடிப்படை (BASIC)

A 3.1 குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு, ஆபத்தான பகுதிகளில் அனுமதி இல்லை.

## குடும்ப வாழ்க்கைக்கான வாய்ப்புகள்

மிகச்சிறந்தவை (EXCELLENT)

A 3.2 குடும்ப வாழ்க்கையை முன்னிறுத்துவதற்காக, பின்வரும் வசதிகள் வழங்கப்படுகின்றன:

- குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதியை வழங்குவது.
- கிடைக்காத பட்சத்தில், பணியாளர்களின்' குழந்தைகளுக்கு கல்வியிலும் வாய்ப்புகளையும், பள்ளிக்கு பிந்தைய நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்வது.
- குழந்தைகள் விளையாடுவதற்கான பாதுகாப்பான பகுதிகளைக் கொண்டிருப்பது.

# 7 வேலைசெய்தல் மற்றும் பிறவற்றிற்கான நிலைகள் பொருத்தமாக உள்ளன

## குடியிருப்பவர்களின் உரிமை

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

A 7.1 பணியாளர்கள் ஒதுக்கப்பட்ட குடியிருப்பில் மட்டுமே வசிக்க வேண்டும் என அவசியமில்லை.

A 7.2 குடியிருப்பவர்கள் எப்போது வேண்டுமானாலும் குடியிருப்பைக் காலிசெய்ய உரிமை உள்ளது.

அடிப்படை (BASIC)

A 7.3 வசிப்பவர்கள் தங்களின் உரிமைகளையும் கடமைகளையும் புரிந்துகொள்ள வேண்டும், அவை குடியிருப்பு விதிகளின் நகலுடன் வழங்கப்படுகின்றன.

A 7.4 குடியிருப்பவர்கள், அவர்கள் செய்யும் பேமெண்ட்டுகளின் சான்று உட்பட, டியிருப்புத் தொடர்பாக ஏற்படும் எல்லாச் செலவுகளும் அடங்கிய முறையாகப் பிரிக்கப்பட்ட சீட்டைப் பெறுவார்கள்.

A 7.5 குடியிருப்புச் செலவுகள், சராசரி சந்தை விலைகளை விட அதிகமாக இருக்காது.

மேம்பட்டவை (ADVANCED)

A 7.6 வங்கிச் சேவைகள், ஷாப்பிங் சேவைகள் அல்லது ஹெல்த்கேர் போன்ற வசதிகளுக்கான அணுகலும் எளிதாக்கப்பட்டுள்ளது.

## குடியிருப்பு

அடிப்படை (BASIC)

A 7.7 குடியிருப்பு என்பது பணியாளர்களுக்காகக் கட்டப்பட்ட வசிப்பதற்கான இடமாகும், இது இயற்கை மற்றும் செயற்கை ஒளி, தடையில்லா மின்சார வசதி, தண்ணீர் வசதி, வானிலை மாற்றங்களிலிருந்து பாதுகாப்பு, காற்றோட்டம் மற்றும் தேவைப்பட்டால் வெப்பமூட்டும் வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

A 7.8 குடியிருப்புப் பகுதியானது அதிக ஆபத்துள்ள செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடத்தில் அமைக்கப்படவில்லை. மற்றும் அதிக இரைச்சல் மிகுந்த பகுதியில் இருந்து தள்ளி இருக்கிறது.

## தனிப்பட்ட முறையில் வாழ்வதற்கான இடம்

அடிப்படை (BASIC)

A 7.9 ஒரே கட்டடத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் குடியிருப்பு வசதி அளிக்கப்பட்டால், வசிப்பவர்கள் (ஆணும் பெண்ணும்) இரட்டை அறையைப் பகிர்ந்துகொள்ள விருப்பம் தெரிவித்திருக்கும்பட்சம் தவிர்த்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனி அறைகள் வழங்கப்படுகின்றன.

A 7.10 ஒவ்வொரு அறையும் குறைந்தது 3.8 மீ² இருக்கும், அது வசிப்பவர்களின் எண்ணிக்கையுடன் பெருக்கப்படும். சீலிங் உயரமானது குறைந்தது 2.1மீ. ஒருவேளை அறைகள் பகிர்ந்துகொள்ளப்பட்டால், இடத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் அதிகபட்சமாக 8 பேர் தங்கலாம்.

A 7.11 ஒவ்வொரு வசிப்பவருக்கும் அவருக்கென சொந்த படுக்கை, மெத்தை அல்லது தூங்குவதற்கான பாய், மதிப்புமிக்க பொருட்களை வைப்பதற்காக தனிப்பட்ட பூட்டக்கூடிய சேமிப்பக இடம், பிற தனிப்பட்ட பொருட்களுக்காக தனிப்பட்ட சேமிப்பக இடம் மற்றும் அவர்களின் அறைக்கான பூட்டு அல்லது அதற்கு இணையான பொருள் ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு அறையும் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பூட்டக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேம்பட்டவை (ADVANCED)

A 7.12 பகிர்ந்த அறைகளுக்கு, வசிப்பவர்களின் தனியுரிமையை மேம்படுத்த மேற்சொன்னவை செயலாக்கப்பட்டுள்ளன.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

A 7.13 பணியாளர்களுக்குத் தனித்தனி அறைகளும் உள்ளன.

## குடியிருப்பு சார்ந்த பிற வசதிகள்

அடிப்படை (BASIC)

A 7.14 குடியிருப்பில் சமைப்பதற்காக வரையறுத்த பகுதிகள் உள்ளன, அவை சுத்தமாகவும் உபயோகிக்கும் விதத்திலும் இருக்கின்றன. வரையறுத்த பகுதிகளில் மட்டுமே சமைக்க வேண்டும். சமைப்பதற்கான பகுதிகள், கேட்டரிங் அல்லது அதற்குச் சமமான சேவையினால் மாற்றம் செய்யப்படலாம்.

A 7.15 குடியிருப்பில் குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளன, பாலினம் சார்ந்து தனித்தனியே கட்டப்பட்டுள்ளன, வசிப்பவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளன. குளியலறையில் வெந்நீர் கிடைக்கும்.

மேம்பட்டவை (ADVANCED)

A 7.16 பொழுதுபோக்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

A 7.17 அதிக ஓய்வு தேவைப்படும் மற்றும் பிறரிடமிருந்து தனித்து வாழும் உடல்நலக் குறைவு உள்ள வசிப்பவர்களுக்கு இந்த வசதிகள் பொருத்தமானவை.

# விளக்கம்

***குடியிருப்பு*** சப்ளையரால் அல்லது சப்ளையர் சார்பாக வழங்கப்படும் வசிப்பிட ஏற்பாடு, இதில் வாழ்வதற்கான இடமும் பிற வசதிகளும் அடங்கியிருக்கும். குடியிருப்பில் டிரக் கேபின்கள் அடங்காது.

***குடியிருப்பு சார்ந்த பிற வசதி*** குடியிருப்பின் பகுதியாக வழங்கப்படும் வசதி, இவை பிற வசிப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது. எடுத்துக்காட்டுகளில் அடங்குபவை பகிர்ந்த சமையலறைகள், குளியலறைகள், கழிப்பறைகள், துணிதுவைப்பதற்கான பகுதிகள் மற்றும் பொழுதுபோக்குப் பகுதிகள்.

***குடியிருப்பவர்*** குடியிருப்பில் வசிக்கும் நபர். குடியிருப்பவர்கள் பணியாளர்களும், சில சமயங்களில் அவர்களின் குடும்பத்தினரும் அடங்குவர்.

***பணியாளர்*** முழுநேரம் அல்லது பகுதிநேரம் வேலை செய்யும் நபர். இதில் யூனிட் அடிப்படையிலான ஊதியம் பெறும் பணியாளர்கள், தொழில்சார்ந்த பயிற்சிபெறுபவர்கள், தகுதிகாண் காலத்தில் இருக்கும் பணியாளர்கள், தளத்தில் ஒரு வாரத்திற்கு பதினெட்டு (18) மணிநேரம் வேலைசெய்யும் துணை ஒப்பந்ததாரர் பணியாளர்கள் ஆகியோர் அடங்குவர்.